இன்னும் சொல்லப்போனால், அன்று தஞ்சை மாநகரம் முழுவதும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெறுவதாக அறிவித்து, அதற்காக நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. அதற்குப் பின்னர் பார்த்தால், தஞ்சைப் பகுதியில் அந்த வளர்ச்சிப் பணி எதுவும் சரியாக நடைபெறவில்லை. எல்லாவற்றிலும் ஊழல், அந்த ஊழலுக்கு ஒரு விசாரணை, அந்த விசாரணை முடிந்து பார்த்தால் அந்த மகாநாடு நடைபெற்றதிலே பெரும் நிதி தவறான வழியிலே போய்விட்டதாக அன்று அமைச்சராக இருந்தவர்களே கூறினர். ஆக, அப்படி நடைபெற்ற மகாநாட்டைப்போல், கோவை மகாநாடு நடைபெறவில்லை. வெளிநாட்டிலிருந்து வந்த அறிஞர்கள் சொன்னார்கள், இந்தக் கோவை மகாநாடானது, தமிழ் மொழி ஒரு செம்மொழி என்பதை மத்திய அரசு அங்கீகரித்ததன் அடிப்படையில் நடைபெற்ற அந்தச் செம்மொழிக்கு உலகமெல்லாம் கிடைக்கக்கூடிய முறையில் தமிழகத்தின் முதலமைச்சர் கலைஞரால் அந்த மகாநாடு ஏற்பாடு செய்ததை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம் என்று அந்த வெளிநாட்டு அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லட்டின் நேரமான *1-30* மணிக்குள் முன்பண மானியக் கோரிக்கைகளை வாக்கெடுப்புக்கு விடவேண்டும். எனவே, முன்பண மானியக் கோரிக்கைகளை வாக்கெடுப்பிற்கு விட்டு நிறைவேற்றலாம்.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2011-2012, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2011-2012* ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause 2 of Article 206, read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, SURJIT SINGH BARNALA, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants in advance, during the financial year, 2011-2012."